# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **257/மா/2017**

ஆணை எண். **12/2018**

நாள் : **22/01/2018**

**திரு T.R. கணேஷன்,**
**சென்னை 89.**

– **முறையீட்டு மனுதாரர்**

**உதவி கோட்டப் பொறியாளர்,**
**அம்பத்தூர் உட்கோட்டம்,**
**சென்னை – 54.**

– **எதிர் மனுதாரர்**

சென்னை, இராமாபுரம், எண்.3/17, பாரதி சாலை முகவரியில் வசிக்கும் திருT.R. கணேஷன் அவர்களின் 19.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 19.12.2017 அன்றே பெறப்பட்டு 257/மா/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்ட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## <u>ஆணை</u>

சென்னை, இராமாபுரம், எண்.3/17, பாரதி சாலை முகவரியில் வசிக்கும் திருT.R. கணேஷன் என்பவர் தான் குடியிருக்கும் பகுதியில் சுமார் 23 குடும்பங்கள் சுமார் 40 ஆண்டுகளாக வசித்து வருவதாகவும், மேற்குறிப்பிட்ட பகுதியில் சாலை அமைப்பதற்காக ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றிக் கொள்ளுமாறு 12.12.2017 நாளிட்ட குறிப்பாணை எண்.1006/2017/C2–இல் அம்பத்தூர் உட்கோட்ட உதவிக் கோட்டப் பொறியாளர் (நெ) க (ம) ப, அவர்களால் இறுதி அறிவிப்பு தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 7(1)–இன் கீழ் பொதுப்பணியாளர் அல்லது உள்ளாட்சி அமைப்பொன்று ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளது என முறைமன்ற நடுவரிடம் வந்திருக்கின்ற எழுத்து வடிவிலான முறையீடு மட்டுமே விசாரணை மேற்கொள்வதற்கு முறைமன்ற நடுவரின்

செயற்பணிகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்த நேர்வு நெடுஞ்சாலைத் துறை சம்பந்தப்பட்டது. எனவே, நெடுஞ்சாலைத்துறை சம்பந்தப்பட்ட நேர்வுகள் மற்றும் அத்துறையின் அதிகாரிகளை இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணை மேற்கொள்வது இம்முறைமன்ற வரம்பிற்கு உட்படாது என மனுதாரருக்கு தெரிவித்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**2018**– ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், **22**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப் பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 31/1/18

24.1.18

25/1/18

பெறுநர்

**திரு T.R. கணேஷன்,**
**3/17, பாரதி சாலை,**
**இராமாபுரம், சென்னை 89.**

**நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**